பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளியாக இந்த ஆண்டு மாற்றித் தரப்படுமா என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அது பற்றி இந்த ஆண்டே அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

கொப்பரை கொள்முதல் மையங்கள்

***8393—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரை கொள்முதல் மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2016 ஆம் ஆண்டிற்கான ஆதரவு விலைத் திட்டத்தின்கீழ் 15-6-2016 முதல் 30-11-2016 வரை தமிழ்நாட்டில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நடைபெற்றது. தற்போது கொப்பரைத் தேங்காய் கொள்முதல் ஏதும் நடைபெறாத நிலையில், மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை. எனினும் தென்னை விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வந்தால், உரிய நேரத்தில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் அரசாணைகளுக்குட்பட்டு மடத்துக்குளம் தொகுதியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மையங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

2018 ஜூன் 29]

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் தொகுதி மட்டுமல்லாமல், கொங்கு மண்டலம் முழுவதும் முழுமுதல் விவசாயமாக தென்னை விவசாயம் விளங்குகின்றது. மடத்துக்குளம் தொகுதியில் தென்னை சாகுபடி என்று பார்த்தால், மடத்துக்குளம் ஒன்றியப் பகுதியில் 4,200 ஹெக்டேர், உடுமலை ஒன்றியப் பகுதியில் 15,000 ஹெக்டேர், அருகிலுள்ள உடுமலை சட்டமன்றத் தொகுதி, குடிமங்கலம் பகுதியில் 12,000 ஹெக்டேர், ஆக மொத்தம் 31,200 ஹெக்டேர், அதாவது 78,000 ஏக்கரில் தென்னை விவசாயம் செய்துவருகின்றனர். தென்னை விவசாயத்தைப் பொறுத்தவரையில், கடந்த 4.5 ஆண்டுகளாக பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தால், கிடைக்கின்ற இடத்தில் எல்லாம் கடன் பெற்று விவசாயம் செய்ய நினைக்கின்ற சமயத்தில் அவர்களுடைய கொஞ்சநஞ்ச வருமானமும் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும்,* pump set *பொருத்துவதற்குமே போய்விடுகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதுதான் உண்மையும்கூட. இந்த நிலையின் காரணமாக தற்போது தேங்காய் உற்பத்தி 10 சதவிகிதம் என்ற அளவுக்கு வெகுவாகக் குறைந்ததால் வெளிச் சந்தையில் கொப்பரைத் தேங்காய் விலை ஏற்றத்தின் காரணமாக, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளில் அரசு கொள்முதல் செய்வதையே நிறுத்திவிட்டது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதை கவனத்திற்கொண்டு, தென்னை விவசாயிகளைக் காக்கின்ற வகையில், கொப்பரைக் கொள்முதல் நிலையத்தை மடத்துக்குளத்தில் அமைப்பது மட்டுமல்லாமல், கொப்பரைக்குக் குறைந்தபட்ச ஆதார விலையாக கிலோவுக்கு ரூ.100/- என்ற வகையில் அரசு நிர்ணயம் செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வெளிச் சந்தையில் ஒரு கிலோ கொப்பரையின் விலை ரூ.90/- முதல் ரூ.120/- வரை விற்கப்படுகிறது. இன்றைக்கு மத்திய அரசு அரவைக் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.75.11 மற்றும் பந்து கொப்பரைக்கு கிலோவுக்கு ரூ.77.50 என்ற நிலையில் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. எனவே அரசு நிர்ணயித்த விலையைக் காட்டிலும், சந்தை விலை கூடுதலாக இருப்பதால், விவசாயிகள் யாரும் கொடுக்க*

முன்வருவதில்லை. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினருடைய மடத்துக்குளம் தொகுதியில் பார்த்தால்கூட, கடந்த 5½ மாதங்கள் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் ஏறத்தாழ 5 நாட்கள் மட்டுமே விவசாயிகள் கொப்பரையை அரசு நிர்ணயித்திருக்கின்ற விலையில் அந்த கொள்முதல் மையத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் ஏறத்தாழ 16 விவசாயிகள் மட்டுமே. 16 விவசாயிகள்மூலம் சுமார் 19.90 இலட்சம் மதிப்பிலான 33.45 மெட்ரிக் டன் அளவிலான கொப்பரை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் தொகுதி விவசாயிகள் கோரிக்கை வைக்கும்பட்சத்தில், வெளிச்சந்தையில் விலை குறைவாக இருக்கும்போது, விவசாயிகள் கஷ்டப்பட்டால் அரசு கொள்முதல் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும். தற்போது வெளிச் சந்தையில் அதிக விலையில் விற்பனை செய்யப்படுகின்றது. அரசு நிர்ணயித்த விலையைக் காட்டிலும் கூடுதலாக விற்பனை செய்வதால் எந்த விவசாயியும் கோரிக்கை வைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் இன்றைக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார். அதுவும் 2 ஆண்டுகள் கழித்துதான் இந்த நிலை வந்திருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து எதிர்காலத்தில் அரசு கவனத்தில் கொள்ளும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக தேங்காய் பிழியும் ஆலை ஒன்றை பொள்ளாச்சியில் அமைத்திருக்கிறது. அதனை அரசு ஒரு புதிய முயற்சியாக செய்திருக்கிறது. எனவே, ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் 20 லிட்டர் தேங்காய் பிழியக்கூடிய அளவிற்கு அந்த ஆலையை அமைக்கவிருக்கிறோம். எனவே, இதுபோன்ற சூழ்நிலை வரும்பட்சத்தில் விவசாயிகளுக்கு பயன் அளிக்கின்ற வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்த, ஒன்றுபட்ட கோவை மாவட்டம் என்று பார்த்தால், 3 இலட்சம் ஏக்கரில் தென்னை விவசாயம் செய்து வருகின்றனர். அந்த விவசாயிகளைக் காக்கின்றவகையிலும்,

2018 ஜூன் 29]

அவர்கள் நேரடியாக பயன் பெறுகின்ற வகையிலும், தென்னையின் மதிப்புக் கூட்டுப் பொருளான தேங்காய் எண்ணெய், virgin oil, *தேங்காய்* powder, *தேங்காய்* cream, activated carbon *ஆகிய பொருட்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை அரசு நிறுவ வேண்டும். அதேபோல, நீராவியிலிருந்து சர்க்கரை மற்றும் வெல்லம் போன்ற மதிப்புக் கூட்டுப் பொருள்கள் தயாரிப்பதற்கு அதிக பொருட்செலவுகள் மற்றும் முதலீடுகள் ஆகின்றன. ஆகவே, அந்த ஆலையை கூட்டுறவுத் துறையின் மூலமாக நேரடியாக அமைப்பதன் மூலமாக விவசாயிகளுக்கு நேரடியாக முழு பலன் கிடைக்கும் என்பதையும், அதற்குண்டான உபகரணங்கள் மற்றும் இயந்திர கட்டமைப்பு வசதிகளை முழு மானியத்துடன் வழங்க அரசு முன்வருமா என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கிறார். இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுத்து, எதிர்காலத்தில் விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையில், இந்தமாதிரி பல பொருட்களைத் தயார் செய்வதற்கான ஆலைகளை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 244, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

244—

துணை மின் நிலையம்

***12770—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—